**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 2/2010**

Prosecution witness: **53**

| | | | |
|---|---|---|---|
| Name: | ராஜா | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A2, A4, A6, A8, A11, A12, A15, A17,A20, A23 present. Others absent. Petition U/s 317 filed and allowed.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 25.04.2023**

**முதல் விசாரணை**:

நான் தென்காசி மாவட்டம் எல்ஆர்எஸ்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தென்காசி கூலக்கடை பஜாரில் முததாரம்மன் கோவிலுக்கு மேற்கே கிழ-மேல் ரோட்டில் பூக்கடை நடத்தி வந்தேன். நான் 15 வருடங்களுக்கு முன்னர் முதுகு தண்டுவட பிரச்சனையில் நான் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்தபோது கூலக்கடை பஜாரில் பிரச்சனை என்று கேள்விப்பட்டேன். நான் வழக்கம் போல் கடையை திறக்க வரும்போது இரண்டு பிரிவினருக்கு இடையே தகராறு என சொன்னார்கள். குமார் பாண்டி வகையறாவுக்கும் வேறு சிலருக்கும் தகராறு என கேள்விப்பட்டேன். இரண்டு தரப்பிலும் கொலை நடந்ததாக கேள்விப்பட்டேன்.. இரண்டு பிரிவினர்கள் இஸ்லாமியர் என்றும் இந்துக்கள் என்றும் தெரியவந்தது. ஆஜர் எதிரிகளை நான் பார்த்ததில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**:-

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார்கள் என்னை விசாரித்தார்கள் என்றும் அவர்கள் விசாரித்தபோது 14.08.2007 ம் தேதி வழக்கம்போல் நான் கடையை திறந்து வியாபாரத்தை கவனித்துக்கொண்டிருந்தபோது காலை 10.15 மணிக்கு எல்ஆர்எஸ் சந்திப்பின் அருகில் வெட்டு குத்து என கலவரமாக இருந்தது என்றும் நாங்கள் அனைவரும் கடையை மூடிவிட்டு ஓட துவங்கினோம் என்றும் அந்த சம்பவத்தில் இரண்டு தரப்பிலும் தலா 3 நபர்கள் இறந்துபோனார்கள் என்றும் சிலருக்கு காயம் ஏற்படடது என்றும் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு நெடுநாட்களாக அதே பகுதியில் கடை நடத்தி வருவதால் எதிரிகளை தெரியும் காயம் பட்டவர்களை தெரியும் என்றும் எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**